DEPOSITION OF WITNESS

(CHAPTER XXII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE , SENDAMANGALAM

C.C.No.94/2025

PW - 4

| | | |
|---|---|---|
| Name | : | சங்கரபாண்டியன் (Lw - 4) |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969(Central Act 44 of 1969 on the ------------day of ----------26

**(எதிரி ஆஜர்)**

முதல் விசாரணை **Date : 24.06.2026**

நான் தற்போது நாமக்கல் மாவட்டம், பரமத்தி காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 2025 முதல் 2026ம் வருடம் வரை நாமக்கல் மதுவிலக்கு அமல் பிரிவில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வந்தேன்.

கடந்த 23.02.2025ம் தேதி நான் நாமக்கல் மதுவிலக்கு அமல் பிரிவில் நான் காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது எனது வாய்மொழி உத்தரவுபடி தலைமை காவலர் திரு.பாஸ்கர் மற்றும் தலைமை காவலர் திரு.சிவராஜ் ஆகியோர் மதுவிலக்கு மற்றும் குற்ற தடுப்பு நடவடிக்கையாக ரோந்து பணியில் இருந்தபோது அன்றைய தினம் காலை 08.00 மணியளவில் செங்கரை காவல்நிலைய எல்லைக்குட்பட்ட பைல்நாடு நவக்காடு, தோட்டத்துவளவு, ஜெகநாதன் வீட்டின் அருகே கண்காணித்தபோது சுமார் 30 வயது மதிக்கத்தக்க ஒரு நபர் சந்தேகப்படும் வகையில் கையில் பிராந்திபாட்டில் உடன் நின்று கொண்டிருந்தவரை பிடித்து விசாரித்தபோது அவர் தன்னுடைய பெயர் ஜெகன்நாதன் த.பெ.சின்னையன் என்றும் தான் சட்டத்திற்கு புறம்பாக அரசு மதுபானத்தை விற்பனைக்கு வைத்துள்ளதாக கூறியதால் எதிரி மற்றும் அவர் வைத்திருந்த மதுபானம் இருந்த பாட்டில்களுடன் நிலையம் வந்து அ.சா.1 தலைமை காவலர் திரு.சிவராஜ் தனியறிக்கையுடன்

எதிரி மற்றும் அவர் வைத்திருந்த மதுபானத்தை பெண் தலைமை காவலர் திருமதி.பவளக்கொடி என்பவரிடம் ஒப்படைத்தார்.

மேற்படி தனியறிக்கையின் பேரில் பெண் தலைமை காவலர் திருமதி.பவளக்கொடி சம்பவம் தொடர்பாக நிலைய குற்ற எண்.56/2025 சட்டப்பிரிவு 4(1) (C) TNP Act கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து ஒரு நகலை புலன் விசாரணைக்காக எனது பார்வைக்கு வைத்தார்.

நான் வழக்கை என்னுடைய புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 14.00 மணிக்கு எதிரியை நிலையத்தில் வைத்து காரணம் கூறி கைது செய்தேன். பின்னர் எதிரியை விசாரித்தபோது அவர் தாமாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். பொதுஜன சாட்சிகள் யாரும் இல்லாததால் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை தலைமை காவலர் திரு.பாஸ்கர் மற்றும் தலைமை காவலர் திரு.சிவராஜ் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்தேன். எதிரி ஜெகநாதன் தனது ஒப்புதல் வாக்குமூலத்தில் அரசு மதுபானத்தை விலைக்கு வாங்கி அதை அதிக விலைக்கு அங்கு வரும் நபர்களுக்கு விற்பனைக்கு வைத்திருந்ததாக கூறினார்.

பின்னர் எதிரி விற்பனைக்காக வைத்திருந்த தலா 180 ML அளவுள்ள Monitor Brandy மதுபானம் 28 பாட்டில்கள் அஜர் செய்தார். அதை தலைமை காவலர் திரு.பாஸ்கர் மற்றும் தலைமை காவலர் திரு.சிவராஜ் ஆகியோர் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றினேன். பின்னர் எதிரியை தகுந்த பிணையில் விடுவித்தேன். கைப்பற்றப்பட்ட மதுபான பாட்டில்களை நாமக்கல் உதவி ஆணையர் (கலால்) அவர்கள் வசம் ஒப்படைத்தேன்.

பின்னர் அன்றைய தினமே நானும் தலைமை காவலர் திரு.பாஸ்கர் மற்றும் தலைமை காவலர் திரு.சிவராஜ் ஆகியோரும் சம்பவ இடம் சென்றோம். 17.00 மணிக்கு பொதுஜன சாட்சிகள் யாரும் இல்லாததால் தலைமை காவலர் திரு.பாஸ்கர் மற்றும் தலைமை காவலர் திரு.சிவராஜ் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தேன். **(**மாதிரி வரைபடம் அ**.**சா**.**ஆ**.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)**

பின்னர் தலைமை காவலர் திரு.பாஸ்கர், தலைமை காவலர் திரு.சிவராஜ் மற்றும் பெண் தலைமை காவலர் திருமதி.பவளக்கொடி ஆகியோரை விசாரித்து தனிதனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். இறுதியாக எதிரியின் மீது சட்டப்பிரிவு 4(1) (C) TNP Act கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் பொதுஜனம் நடமாட்டம் உள்ள இடம் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு அருகில் பொதுஜனங்களை யாரையும்

எதிரி அரசு மதுபானங்களை உரிமம் இன்றி விற்பனை செய்கிறாரா என்பது பற்றி விசாரித்து தெரிந்து கொண்டோமா என்றால் தெரிந்துகொண்டேன். யார் யாரை விசாரித்தோம் என்றால் தற்போது எனக்கு நினைவில்லை. நாங்கள் விசாரித்த பொதுஜன நபர்களை இவ்வழக்கில் சாட்சிகளாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். எதிரி அரசு மதுபான கடைகளில் மது வாங்கியதாக சொல்லியுள்ள நிலையில் அந்த மதுபான கடையில் எதிரிதான் மதுபானத்தை வாங்கினார் என்பதை உறுதி படுத்தும் வகையில் ரசீதுகள் எதையும் கைப்பற்றவோ அல்லது அரசு மதுபான கடை ஊழியர்கள் யாரையும் விசாரிக்கவோ இல்லை என்றால் சரிதான். மேற்படி மதுபான பாட்டில்களை எதிரி நைலான் பையில் வைத்திருந்ததாக சொல்லப்படும் நிலையில் மேற்படி நைலான் பையை கைப்பற்றி நீதிமன்றத்தில் ஒப்படைத்தேனா என்றால் இல்லை. எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெறும்போது அது அவருக்கு எதிராக பயன்படுத்தப்படகூடும் என்ற சங்கதியை எதிரியிடம் கூறி ஒப்புதல் வாக்குமூலம் பெறவில்லை என்றால் சரியல்ல. மேற்படி சங்கதிகளை ஒப்புதல் வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் எதிரியிடம் இருந்து மற்ற நபர்கள் மதுபானங்களை வாங்கி கொண்டு சென்றார்களா என்பது பற்றி விசாரிக்கவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் கைப்பற்றப்பட்ட பாட்டில்கள் என் முன்னிலையில் திறந்து பார்க்கப்படவில்லை என்றால் சரிதான். கைப்பற்றப்பட்ட பாட்டில்களை ஒப்புதல் வாக்குமூலம் பெறும்போது ஒதிரி போலிசாரின் பொறுப்பில் தான் இருந்தார் என்றால் சரிதான். எதிரிக்கும் வழக்கு சொத்துக்களுக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றாலும் ஏற்கனவே பிற வழக்குகளில் கைப்பற்றப்பட்டு காவல்நிலையத்தில் வைத்திருந்த மது பாட்டில்களை எதிரியிடம் இருந்து கைப்பற்றியதாக கூறி எதிரியின் மீதுபொய்யாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கின் ஆவணங்களை காவல்நிலையத்தில் வைத்து தயாரித்துவிட்டு சம்பவ இடத்தில் வைத்து தயாரித்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை**:** இல்லை.

**Taken down before me in open court and read/interpreted to the witness and acknowledged by him/ her to be correct.**

**Sd/- Tr.S.Raja Kumaran B.E. L.L.B.,**
**Judicial Magistrate,**
**Sendamangalam**